சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை 08

ந.க.எண். 8961 / அ7/ 2023 நாள். 18.11.2023

பொருள் பள்ளிக் கல்வி - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்பு எண் 110 இன்படி 2023-2024 ஆம் ஆண்டிற்கான "இளம் கவிஞர் விருது" கவிதைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் - பள்ளி அளவில் அரசு/ சென்னை/ ஆதிதிராவிட நல உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 21.11.2023 அன்று கவிதைப் போட்டிகள் நடத்தி அதில் சிறந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவியை தெரிவு செய்து விவரம் அனுப்ப தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் சார்ந்து.

பார்வை சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 031698/எம்/இ1/2021, நாள். 16.11.2023

''''''''''''''''''''''''''''''''

பார்வையில் காணும் அரசுக் கடிதம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கவிதைப் போட்டிகள் நடத்தி சிறந்த படைப்புகளை தெரிவு செய்து அந்த மாணவ, மாணவியர்களுக்கு "இளம் கவிஞர் விருது" மற்றும் பரிசுகள் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு/ சென்னை/ ஆதிதிராவிட நல உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பயிலும் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி அளவில் கவிதைப் போட்டிகள் நடத்தி அதில் முதலிடம் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவியை தெரிவு செய்து வருவாய் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பி வைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாநில அளவில் நடைபெறும் போட்டிக்கு வருவாய் மாவட்ட அளவில் முதல் இடம் பெறும் 1 மாணவன் மற்றும் 1 மாணவி பங்கு பெறுவர்.

## போட்டிகளுக்கான அட்டவணை

| வ. எண் | போட்டியின் தலைப்பு | பங்கு பெறும் மாணவர்கள் | போட்டி நடைபெறும் நிலை | நடை பெறும் நாள் | நடைபெறும் மையம் | பங்கு பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1. வேறுபாடற்ற சமுதாயத்திற்கு பாரதியாரின் தொலைநோக்கு பார்வை<br>2. வேறுபாடற்ற சமுதாயத்தினை உறுதி செய்திட மாணவர்களின் பங்கு | 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் | பள்ளி அளவில் | 21.11.2023 | அந்தந்த பள்ளிகள் | |
| 2 | | | வருவாய் மாவட்ட அளவில் | 23.11.2023 | மாகாண மகளிர் மாதிரி அரசு மேல் நிலைப் பள்ளி, எழும்பூர், சென்னை-08. | பள்ளி அளவில் முதலிடம் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி |
| 3 | | | மாநில அளவில் | 30.11.2023 | | வருவாய் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி |

குறிப்பு.

1. கவிதை குறைந்தது 40 வரிகள் கொண்டதாக இருக்க வேண்டும்(மதிப்பெண்கள் 20)
2. மொழி நடை (10 மதிப்பெண்கள்)
   - இலக்கண நயம் – 5 மதிப்பெண்கள்,
   - கவிதைக்கான விளக்கம் அளித்தல் – 5 மதிப்பெண்கள்

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) தென் சென்னை, வட சென்னை
2. அனைத்து அரசு/ சென்னை/ ஆதிதிராவிட நல உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்

நகல்

1. சென்னை-06, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது
2. சென்னை 03 கல்வி அலுவலர் பெருநகர சென்னை மாநகராட்சி

| கவிதைப் போட்டியில் தெரிவு செய்யப்படும் மாணவ / மாணவியின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | மாணவன் மற்றும் மாணவியின் பெயர் | பெற்றோர் பெயர் | பயிலும் பள்ளி | மாவட்டத்தின் பெயர் | தொலைபேசி எண் |
| | | | | | |
| | | | | | |